5287

OL/2010/45-T- I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## பரதநாட்டியம் I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. முதலாம் காலத்தின் மறுபெயர்
   (1) சமம் (2) விளம்பம் (3) மத்திமம் (4) துரிதம்

2. 'சாரிகா அடவு' என்பது
   (1) தெய் ஹத் தெய் ஹி (2) தெய்யா தெய்யி (3) தா தெய்தெய் தத் (4) தத் தெய் தாம்

3. பஞ்சநடைகளை ஆடும்போது பாதங்களின் நிலை
   (1) ஆலிடம் (2) ஸ்தானகம் (3) சமபாதம் (4) ஏகபாதம்

4. 'கலப்பையினால் உழுதல்' இதனை அபிநயித்துக் காட்டப் பிரயோகிக்கும் ஹஸ்தம்
   (1) கஜ ஹஸ்தம் (2) டமரு ஹஸ்தம் (3) பல்லி ஹஸ்தம் (4) பாண ஹஸ்தம்

5. அலாரிப்பு என்னும் உருப்படி அமைந்துள்ள நடை
   (1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம் (4) மிஸ்ரம்

6. பாட்டின் கால அளவு மாறுபடாமல் இருப்பது
   (1) தாளம் (2) சுருதி (3) லயம் (4) அங்கம்

7. சப்தம் பெரும்பாலும் அமைந்துள்ள தாளம்
   (1) திஸ்ரசாபு (2) கண்டசாபு (3) மிஸ்ரசாபு (4) சங்கீர்ணசாபு

8. பாத்திரத்தின் அந்தப் பிராணனில் 'அஷ்ரமஹ' குறிப்பது
   (1) களைப்பின்மை (2) வடிவம் (3) உறுதி (4) புத்திக்கூர்மை

9. மிருதங்க வாத்தியத்தினை முதன்முதலாக வாசித்தவர்
   (1) நந்திகேஸ்வரர் (2) பிரம்மா (3) விஷ்ணு (4) மகேஸ்வரன்

10. மூங்கிலால் செய்யப்பட்ட வாத்தியம்
   (1) நாதஸ்வரம் (2) துந்தினா (3) கிளாரினட் (4) புல்லாங்குழல்

[பக். 2 ஐப் பார்க்க

11. நட்டுவாங்க தாளத்தில் கயிறு குறித்து நிற்கும் அதிதேவதை
(1) சூரியன் (2) சந்திரன் (3) இராகுகேது (4) வாயு தேவன்

12. 'துந்ததர்ஷனே' இதனை அபிநயிக்கப் பிரயோகிக்கப்படும் சம்யுத ஹஸ்தம்
(1) கர்க்கடகம் (2) புஷ்பபுடம் (3) கர்த்தரீஸ்வஸ்திகம் (4) உற்சங்கம்

13. 'மர்மோக்கியாம்' என்பதன் பொருள்
(1) கடுங்கோபம் (2) அம்பு எய்தல்
(3) விஷத்தினை அருந்துதல் (4) முணுமுணுத்தல்

14. நரசிம்ம அவதாரத்திற்குரிய முத்திரையைப் பயன்படுத்தி அபிநயிக்கப்படும் தேவஹஸ்தம்
(1) விஷ்ணு (2) சிவன் (3) பிரம்மா (4) சண்முகன்

15. வலது கையில் சூசியும் இடது கையில் தாமரை சூடமும் பிரயோகித்து அபிநயிக்கும் தேவஹஸ்தம்
(1) இந்திரன் (2) யமன் (3) வாயு (4) வருணன்

16. 'அஸ்லோத்பிளவன' பாதபேதத்தைப் பயன்படுத்தி அபிநயிக்கும் அவதாரம்
(1) நரசிம்ம (2) மத்ஸய (3) வராக (4) கல்கி

17. வாமன அவதாரத்தை அபிநயிக்க பிரயோகிக்கும் முஷ்டிக்கைகள் குறித்து நிற்பது
(1) சங்கு சக்கரம் (2) வில் அம்பு (3) குடை கமண்டலம் (4) புல்லாங்குழல்

18. மைத்துனன் இதனை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் பாந்தவ்ய ஹஸ்தம்

| | வலது கை | இடது கை | | வலது கை | இடது கை |
|---|---|---|---|---|---|
| (1) | கர்த்தரீமுகம் | சிகரம் | (2) | சிகரம் | கர்த்தரீமுகம் |
| (3) | கர்த்தரீமுகம் | மிருகசீர்ஸம் | (4) | மயூரம் | மயூரம் |

19. புராண கதைகளை உள்ளடக்கமாகக் கொண்ட பாடல்களுக்கு ஆடப்படும் கிராமிய நடனம்
(1) ஒயிலாட்டம் (2) மயிலாட்டம் (3) மானாட்டம் (4) கரகாட்டம்

20. கிராமிய நடனங்களில் **தொழில்சாராத** நடனம்
(1) தேயிலைக்கொழுந்து நடனம் (2) மீனவ நடனம்
(3) அரிவிவெட்டு நடனம் (4) கும்மி நடனம்

21. ரௌத்திர ரஸத்திற்கு எதிர் ரஸம்
(1) கருணா (2) சிருங்காரம் (3) அற்புதம் (4) வீரம்

22. மன்மதனின் மதனசைந்நியாவஸ்தைகளில் முல்லை என்பது
(1) நினைத்தல் (2) மூர்ச்சையாகுதல் (3) நடைதள்ளாடுதல் (4) உடல்நடுங்குதல்

23. பிரேங்கண மண்டலத்தில் இருந்து அபிநயிக்கும் நவக்கிரகங்கள்
(1) சந்திரன் வெள்ளி சனி (2) சூரியன் சந்திரன் வியாழன்
(3) வெள்ளி சனி ராகு (4) சந்திரன் வியாழன் கேது

24. பாத்திர இலட்சணங்களில் **அடங்காதது**
(1) இனிமையான குரல் (2) கூந்தலின்மை
(3) பெரியவர்களிடம் பணிவு (4) தாளஸ்வர ஞானம்

25. சபா இலட்சண ஸ்லோகத்தில் சாஸ்திரங்களை ஒப்பிடுவது
(1) கற்பக விருட்சத்திற்கு (2) இலைகளுக்கு
(3) மலர்களுக்கு (4) வண்டுகளுக்கு

26. தாளம் இன்றி ராகத்துடன் மட்டும் பாடும் உருப்படி
(1) ஜாவளி (2) அஷ்டபதி (3) பதம் (4) சுலோகம்

27. கீர்த்தனை என்பதன் பொருள்
(1) இசைப்பாடல் புகழ்ச்சி (2) சாகித்தியம்
(3) வணக்கம் (4) ஸ்வரங்கள்

[பக். 3 ஐப் பார்க்க

28. எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும் தாளங்கள்

(1) சதுஸ்ரஜாதி - துருவதாளம்
கண்டஜாதி - அடதாளம்

(2) கண்டஜாதி - துருவதாளம்
மிஸ்ரஜாதி - மட்டியதாளம்

(3) சதுஸ்ரஜாதி - அடதாளம்
கண்டஜாதி - துருவதாளம்

(4) சங்கீர்ணஜாதி - திரிபுடைதாளம்
சதுஸ்ரஜாதி - மட்டியதாளம்

29. மிஸ்ரஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சரகால எண்ணிக்கை

(1) 16 (2) 18 (3) 23 (4) 29

30. 1 0 1 = 12 எண்ணிக்கையைக் காட்டும் ஜாதி தாளம்

(1) சதுஸ்ரஜாதி - அடதாளம்
(2) சங்கீர்ணஜாதி - ஜம்பைதாளம்
(3) கண்டஜாதி - மட்டியதாளம்
(4) மிஸ்ரஜாதி - திரிபுடைதாளம்

31. பாதம் முழுவதும் நிலத்தில் படும்படி உராஞ்சி ஆடும் கூத்து

(1) தென்பாங்கு (2) தென்மோடி (3) முல்லைமோடி (4) வடமோடி

32. சோழர் காலத்தில் கலையம்சத்துடன் கட்டப்பட்ட மிகப்பெரிய கற்கோயில்

(1) சிதம்பரம் (2) பிரகதீஸ்வரர் (3) சாரங்கபாணி (4) செங்கணார்

33. பாண்டிய அரசனின் சின்னம்

(1) நந்தி (2) சர்ப்பம் (3) வில் (4) மீன்

34. 'பாவைநோன்பு' பற்றிக் கூறும் நூல்

(1) கலித்தொகை (2) பரிபாடல் (3) சீவகசிந்தாமணி (4) கலிங்கத்துப்பரணி

35. 'என்ன புண்ணியம் செய்தனை' என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம்

(1) திருவலஞ்சுழி (2) சிதம்பரம் (3) கும்பகோணம் (4) அண்ணாமலை

- **36** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து **உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை** இடுக.

36. தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீஇராமனைப் பற்றி பாடியதுபோல கோபாலகிருஷ்ண பாரதியார் முதன்முதலில் ......................... பற்றிப் பாடினார்.

(1) கிருஷ்ணனை (2) சிவனை (3) முருகனை (4) பிள்ளையாரை

37. திருப்பாவை விரதம் ......................... உரியது.

(1) சிவனுக்கு (2) திருமாலுக்கு (3) முருகனுக்கு (4) பிள்ளையாருக்கு

38. குடைவரைக் கோயில்கள் ......................... காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

(1) சோழர் (2) சேரர் (3) பல்லவர் (4) பாண்டியவர்

39. ......................... காலம் பொற்காலம் எனப் போற்றப்பட்டது.

(1) பல்லவர் (2) சோழர் (3) பாண்டியர் (4) சேரர்

40. ஸ்ரீராமர் இராவணனை சங்கரித்தபோது உண்டாகிய ரஸம் ......................... ஆகும்.

(1) ரௌத்ரம் (2) சிருங்காரம் (3) பயானகம் (4) ஹாஸ்யம்

* *

[பக். 4 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
**Bharatha Dancing I, II**

## பரதநாட்டியம் II

※ **முதலாம்** வினாவிற்கும், ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ வினாத்தாள் **II** இற்குரிய புள்ளிகள் **60** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) "நிற்பதுவே நடப்பதுவே" என்னும் பாடலை இயற்றியவர் யார?

(ii) இரண்ணியனை வதம் செய்ய விஷ்ணு எடுத்த அவதாரம் யாது?

(iii) நாட்டிய உருப்படிகளின் வரிசைகளில் முதலில் அபிநயத்தினை அறிமுகப்படுத்தும் உருப்படி யாது?

(iv) பச்சைமணி, பவளமணி, சங்குமணி, சங்குவளை, செருகிய தலைமுடி, பாவாடை, தாவணி அணிந்த நடன பாத்திரத்திற்குப் பொருத்தமானவர் யார்?

(v) மிருதங்கத்தின் மையத்தில் தற்காலிகமாகப் பூசப்படுகின்ற கலவையின் பெயர் யாது?

(vi) சங்கமருவிய காலத்தில் நடனக்கலை பற்றிக் கூறும் இலக்கிய நூல் எது?

(vii) சப்ரகமுவ நடனத்தில் முதலில் ஆடப்படும் நிகழ்ச்சி எது?

(viii) கொஹோம்பகங்காரியவினைத் தழுவிய நடனம் யாது?

(ix) வர்ணம் என்னும் உருப்படியின் **இரு** பகுதிகளும் எவை?

(x) சங்ககால ஆடல் பற்றிக் கூறும் மிக முக்கியமான **இரு** இலக்கிய நூல்கள் எவை?

**2.** (அ) 'கிடதக தரிகிடதொம்' அடவு எவ்வகையைச் சேர்ந்தது?

(ஆ) இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகள் யாவை?

(இ) இந்த அடவின் வரவிலக்கணத்தைச் சுருக்கமாக எழுதுக.

(ஈ) இந்த அடவினைத் திரிகாலங்களிலும் தாள, அங்க அடையாளங்களுடன் எழுதுக.

**3.** பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகங்களைக் கருத்துடன் எழுதுக.

(அ) ஹம்சபக்ஷம் (ஆ) தாம்ரசூடம் (இ) கபோதம் (ஈ) கற்கடகம்

**4.** தஞ்சை நால்வரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர்கள் ஆற்றிய கலைத்தொண்டினையும் எழுதுக.

**5.** திருப்பாவை, ஒளிவிழா இவை பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

**6.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) அடவு (ஆ) சபை (இ) சபாநாயகன் (ஈ) நட்டுவாங்கத்தாளம்

**7.** றுகுணு நடனத்தின் தோற்றம், ஆடல்முறை, ஆடையணிகள், பக்கவாத்தியம் பற்றி விளக்கமாக எழுதுக.

* * *